# THE EDUCATIONAL ISSUES FACED BY THE PARENTS LOST CHILDREN - A RESEARCH BASED ON THIYAWATTAVAN VILLEGE OF KORALAIPPATTU CENTRAL DIVISIONAL SECTERIAT AREA

## பெற்றோரை இழந்த சிறார்கள் எதிர்கொள்ளும் கல்வி தொடர்பான பிரச்சினைகள்: கோறளைப்பற்று மத்தி செயலகப்பிரிவிற்குட்பட்ட தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவை மையப்படுத்திய ஆய்வு

**HLM. Mohideen[1] & IM. Thalib[2]**

[1]*BT/BC/Meeravoadai Al-Hidaya Maha Vidyalayam, Oddamavadi.*

[2]Department of Arabic, *Eastern* University, Sri Lanka.

*mohimaji123@gmail.com* *thalibmim@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம் (ABSTRACT)**

*மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவின் தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவில் வதியும் பெற்றோரில் இருவரையும் அல்லது ஒருவரை இழந்த சிறார்களின் கல்வி தொடர்பான பிரச்சினைகள், அதற்கான காரணிகள் மற்றும் அவற்றை தீர்க்கக்கூடிய அதிகபட்ச தீர்வுகள் தொடர்பாக இவ் ஆய்வு கவனம் செலுத்துகின்றது. குறித்த கிராமத்தில் உள்ள 111 சிறார்கள் தமது பெற்றோரில் இருவரை அல்லது ஒருவரை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பிரிந்துள்ளனர். இதனால் இவ்விழப்பு ஏற்படுத்தும் தாக்கங்கள் பாரிய பிரச்சினைகளையும் சவால்களையும் உருவாக்கி இச்சிறார்களது கல்விச் செயற்பாடுகளை பாதிப்படையச்செய்கின்றது என்பதனை இவ்வாய்வு கருதுகோளாகக் கொண்டுள்ளது. குறித்த கிராம சேவகர் பிரிவில் வதியும் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்விசார் பிரச்சினைகளை பாடசாலை கற்றல் செயற்பாட்டுத் தரவுகள் மூலம் இனங்கண்டு அதற்கான காரணங்களை உளவியல், பொருளாதார, சமூக, நிறுவன ரீதியாக அடையாளப்படுத்தல், அவ்வாறு அடையாளம் காணப்படும் பிரச்சினைகள் சமூக மட்டத்தில் இச்சிறார்களது வாழ்வில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதனை ஆய்வுக்குட்படுத்தி வெளிக் கொணர்தல், இப்பிரச்சினைகளை தீர்த்து குறித்த மாணவர்களது கல்விச் செயற்பாட்டினை வினைத்திறன் கொண்டதாக மாற்றியமைப்பதன் மூலம் அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கான பரிகாரங்களையும் நிவாரணங்களையும் முன்மொழிதல் ஆகியவற்றை இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது. இதற்காக பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளைப் பயன்படுத்திய ஒரு விவரிப்பு ஆய்வாக " ரணப்படுத்தும் வகையில் முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் ஆய்வு மூலங்களாகக் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் இக்கிராம மாணவர்கள் உளவியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் ஒழுக்க, ஆரோக்கியம்சார்ந்த பலவேறுபட்ட காரணிகளினால் கல்வியில் நாட்டமின்மை, கற்றலில் பின்னடைவு, அடிப்படை எண், எழுத்து தொடர்பான அறிவின்மை, உரிய தேர்ச்சிகளை அடையாமை, இடைவிலகல் போன்ற கல்விசார் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. உளவியல் ரீதியாக ஆளுமை, நடத்தைசார் பிரச்சினைகள், தாழ்வு மனப்பாங்கு போன்றவையும் ஆரோக்கியம்சார்ந்த பிரச்சினைகளாக வசதிகளற்ற வீடுகளில் வசித்தல், தொற்று நோய்களுக்கு ஆளாகுதல், சுத்தமான குடிநீர் மற்றும் போசாக்கு உணவைப் பெறுவதில் உள்ள இயலாமை, கழிப்பிடப்பிரச்சினை ஆகியவற்றையும் பண்பாட்டு ஒழுக்கம் தொடர்பில் மறை சமூகமயமாக்கல், பண்பாட்டுக்கு முரணான செயற்பாடுகள், சகபாடிகள், ஒத்தகுழுக்களின் தாக்கம், துஸ்பிரயோகம் ஆகியவையும் சமூகம்சார்பானவையாக சமூகப்புறக்கணிப்பு, வெகுஜன ஊடகம் மற்றும் விரைவான தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றின் தாக்கம், அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மீண்டுவர முடியாமை, உல்லாசப்பயணத்துறை, சமூக மனப்பாங்கு ஆகியவையும் பொருளாதார ரீதியாக வறுமை, அடுத்தவரில் தங்கியிருத்தல், வளங்களைப்பெறுவதில் ஏற்படும் தடைகள் ஆகியவையும் இவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளாகும். இப்பிரச்சினைகளில் பிள்ளையின் தனித்துவம், குடும்பச் சூழல், சமூகச் சூழல், அரச நிர்வாக அமைப்பு மற்றும் பௌதீகச் சூழல் என்பன தொடர்புபடுகின்றன. சிறந்த குடும்பமயமாக்கல், வினைத்திறன்மிக்க நிர்வாக முகாமைத்துவம் உருவாக்கப்படல், மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தல், உளவள ஆலோசனை வழங்கல், வாழ்வாதாரத்தையும் வளங்களையும் அதிகரித்தல், தொழில் கல்வி, விழுமியக்கல்வியை வழங்கல், சிறுவர் நிதியங்களை உருவாக்கல் ஆகியவற்றை இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக இவ்வாய்வு முன்வைக்கின்றது.*

முதன்மைச் சொற்கள் (Keywords)

தியாவட்டவான், பெற்றோரை இழந்த சிறார்கள், கல்விசார் பிரச்சினைகள், காரணிகள், தீர்வுகள்

## ஆய்வு அறிமுகம் (INTRODUCTION)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவில் தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவில் வதியும் பெற்றோரை இருவரையும் அல்லது ஒருவரை இழந்த சிறார்களின் கல்வி தொடர்பான பிரச்சினைகள், அதற்கான காரணிகள் மற்றும் அவற்றை தீர்க்கக்கூடிய அதிகபட்ச தீர்வுகள் தொடர்பாக இவ் ஆய்வு கவனம் செலுத்துகின்றது.



ISBN 978-955-627-120-1

இன்று கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள தெருவோரச் சமூகமாக மாறிவரும் பெற்றோரை இழந்த சிறார்கள் குறித்து கரிசனை கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது. „சமூகத்தினதும் இந்நாட்டினதும் தவிர்க்க முடியாத எதிர்கால சந்ததி என்ற வகையில் நல்லதொரு எதிர்காலத்தை அவர்களுக்கு வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அவ்வாறு வழங்காத பட்சத்தில் சமூகத்தீமைகளையும் சமுதாய விரோதச் செயல்களையும் சுமக்கின்ற, சமனிலை ஆளுமையற்ற ஒரு சமூகம் உருவாகும் அபாயமுள்ளதுூ (காசிம். P.M.M - 2017 )

ஒரு பிள்ளையைப் பொருத்தவரையில் பெற்றோரே அவனது குடும்ப உறவின் முக்கிய இடத்தில் உள்ளவர்கள். அவர்களுடனான உறவு வலுவடைய வேண்டிய தேவை உள்ளது. „ஒரு பிள்ளை குடும்பத்துடன் கொண்டிருக்கும் தொடர்பானது பிள்ளையின் ஆளுமையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றது. இச்செல்வாக்கானது அதனுடைய ஆயுட்காலம் முழுவதும் நீடிக்கின்றதுூ (கருணாநிதி .M. - 2007)

பெற்றோரின் அணைப்பும் அரவணைப்பும் ஒரு பிள்ளையின் வாழ்வில் மிக முக்கிய ஒன்றாகும். அது அப்பிள்ளையின் வாழ்வியல் கட்டங்களில் ஏதோ ஒருவகையில் தொடர்புபட்டுக் கொண்டேயிருக்கும். „தாயின் அரவணைப்பிலிருந்து பிரித்து வளர்க்கப்பட்ட விலங்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து அத்தகைய விலங்குகள் வளர்ந்த பின்பு நிறையில் குறைவு போன்ற சில இடர்கள் ஏற்பட்டமை தெரிய வந்துள்ளது. இதிலிருந்து தாயின் ஸ்பரிசம் குழந்தையின் சிறு பராயத்தில் மட்டுமன்றி வளர்ந்த பின்னரும் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாக இருப்பதை அறிய முடிகிறதுூ (ஹஸன் M.H.M. - 2007)

***வரைபடம்: 01***

| வகை | ஆண் | பெண் |
|---|---|---|
| பெற்றோர் இருவரையும் இழந்தோர் | 06 | 11 |
| தந்தையை இழந்தோர் | 38 | 56 |

*மூலம்: கிராம சேவகர் அறிக்கை*

பெற்றோரைப்பிரிந்து வாழும் பிள்ளைகள் தமது கல்வியைப் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நிசாந்தி உதயக்குமார் தனது „மாணவர்களின் கல்வி தடைப்படுவதற்கான காரணங்கள்ூ என்ற கட்டுரையில் பிள்ளைகளின் கல்வி தடைப்படுவதற்குரிய காரணங்களை பட்டியலிடும் போது அவர்கள் பெற்றோரைப் பிரிந்து இருப்பதை முக்கிய ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். (நிசாந்தி .U.- 2013)

இதே கருத்தை D. அருணா „இலங்கையில் சிறுவர் உரிமையும், சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்ூ என்ற கட்டுரையில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான நல்லுறவை ஏற்படுத்தி பெற்றோர்களை பிள்ளைகளில் அக்கறை உள்ளவர்களாக மாற்றுவதன் மூலம் அவர்களது கல்விச் செயற்பாட்டினை தொடர முடியும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். (அருணா .D. - 2011)


„குறித்த கிராமத்தில் உள்ள சிறார்கள் இறப்பு, வெளிநாட்டுப் பயணம், பெற்றோர் விவாகரத்து, தொழில் நிமித்தம் ஏற்படும் இடம்பெயர்வு, போர், இயற்கை அனர்த்தங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் தமது பெற்றோரில் இருவரையும் அல்லது ஒருவரையோ தற்கலிகமாகவோ நிரந்தரமாகவோ பிரிய வேண்டியேற்படுகின்றதுூ (ஜௌபர் A.L.M. - 2017) இதனால் இவ்விழப்பு ஏற்படுத்தும் தாக்கங்கள் பாரிய



ISBN 978-955-627-120-1

பிரச்சினைகளையும் சவால்களையும் உருவாக்கி இச்சிறார்களது கல்விச் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்துகின்றது என்பதனை இவ்வாய்வு கருதுகோளாகக் கொண்டுள்ளது.

***வரைபடம்: 02***




*மூலம்: கள ஆய்வு*

இதன்படி பெரும்பாலும் கல்வியில் நாட்டமின்மை, கற்றலில் பின்னடைவு போன்ற கற்றல்சார் பிரச்சினைகளே இவர்களிடம் பெரும்பாலும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அப்பிள்ளைகளிடம் அடிப்படை எண், எழுத்து தொடர்பான அறிவின்மை. அல்லது அதில் உரிய தேர்ச்சிகளை அடையாமை போன்ற கல்விசார் சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த பிரச்சினைகள் அப்பிள்ளைகளுக்கு கற்றலுக்கான சூழலை தடை செய்கின்றது. ஏனெனில் பிள்ளைகளின் தேவைகள் நிறைவேற்றப்படும் போது அது கற்றல் செயன்முறையில் ஆர்வத்துடன் ஈடுபடும். „மனித ஊக்கலின் மையமாக அமைவது தனியாட்களின் தேவையாகும்" (கல்வி உளவியல் தொகுதி II - 1989) இங்கு பிள்ளையின் தேவைகள் நிறைவேற்றப்படாமல் தடைப்படும் போது உரிய கற்றல் செயற்பாடும் தடைப்படுகின்றது.

பெற்றோருடனான பிரிவானது பிள்ளையின் தேவை தடைசெய்யப்படும் ஒரு துரதிஸ்டமான சந்தர்ப்பமாகும். „இன்று பெற்றோரிடமிருந்து பிள்ளை பிரிக்கப்பட்டு மாஸ்லோவின் உளவியல் தேவைகள் கோட்பாட்டின் வழி ஐந்து படி நிலைகளிலும் உடலியல், அன்பு, காப்பு, சுயதிறனியல், சுயதிருப்தி என்பவற்றில் பிள்ளைக்கு குறைவு ஏற்பட இன்றைய சூழல் வழி வகுக்கின்றது" (சோபா .B. - 2015)

அத்துடன் கற்பித்தலுக்கும் மாணவர்-மாணவர் மற்றும் மாணவர் - ஆசிரியர் இடைத் தொடர்பாடலுக்கும் துலங்கலின்றி காணப்படுகின்றனர். இன்றைய கல்வி முறைக்கு அதிகளவில் பொருத்தப்பாடு இல்லாதவர்களாகவே இந்தச்சிறார்கள் இருக்கின்றனர்.

இச்சிறார்களிடையே காணப்பட்ட மற்றொரு கல்வியுடன் தொடர்புடைய பிரச்சினை இடை விலகலாகும். „குறித்த பிரதேசத்தில் இடைவிலகலில் அதிகளவில் இத்தகைய சிறார்களே உள்ளனர். தான் தங்கி வாழும் குடும்பத்தின் பொருளாதார நிலை, பராமரிப்பின்மை, நோய், பாடசாலைக்கும் வீட்டிற்குமான தூரம், பாடசாலை மற்றும் அதன் சூழல் மீதான வெறுப்பு, சகபாடிகள் தொந்தரவு போன்ற காரணங்கள் இடைவிலகலுக்கான காரணங்களாக இருக்கலாம்"(இஸ்மாயில் A.L.M. - 2017)



ISBN 978-955-627-120-1

இவ்வாய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ள பிரச்சினைகள் இலங்கையில் ஏனைய சமூக மட்டங்களிலும் காணப்படும் பொதுவான பிரச்சினைகளுடன் ஒத்து செல்வது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தனது ஆய்வொன்றில் பின்வரும் பிரச்சினைகளை பட்டியலிடுகின்றார்:

1. வறுமை, பொருளாதாரப்பிரச்சினைகள், கலாசார மாற்றங்கள்
2. பிள்ளை பெற்றோர் உறவு சிதைவு, பிளவுபட்ட குடும்பங்கள்
3. யுத்த சூழ்நிலைத் தாக்கங்கள், வன்முறைக் கலாசாரம்
4. பாடசாலைக்குச் செல்லாமை, இடைவிலகல்
5. கட்டிளமைப்பருவ பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை, இயற்கை அனர்த்தங்கள் (கலாநிதி. கமலநாதன் .T. - 2005)

## ஆய்வின் நோக்கம் (OBJECTIVES)

இந்தப்பின்னணியினை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

- கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவின் தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவில் வதியும் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்விசார் பிரச்சினைகளை பாடசாலை கற்றல் செயற்பாட்டுத் தரவுகள் மூலம் இனங்கண்டு அதற்கான காரணங்களை உளவியல், பொருளாதார, சமூக, நிறுவன ரீதியாக அடையாளப்படுத்தல்
- அடையாளம் காணப்படும் பிரச்சினைகள் சமூக மட்டத்தில் இச்சிறார்களது வாழ்வில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதனை ஆய்வுக்குட்படுத்தி வெளிக் கொணர்தல்
- இப்பிரச்சினைகளை தீர்த்து குறித்த மாணவர்களது கல்விச் செயற்பாட்டினை வினைத்திறன் கொண்டதாக மாற்றியமைப்பதன் மூலம் அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கான பரிகாரங்களையும் நிவாரணங்களையும் முன்மொழிதல்

## ஆய்வு முறையியல் (METHODOLOGY)

இவ்வாய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளைப் பயன்படுத்திய ஒரு விவரிப்பு ஆய்வாக அமையப்பெற்றுள்ளது. இவ்வாய்வானது ஒரு கள ஆய்வாக இருப்பதனால் இதனை நேர்த்தியாகப் ” ரணடுப்படுத்தும் வகையில் முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் ஆய்வு மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன.

முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து, குவியக் குழு கலந்துரையாடல் (Focus Group Discussions) என்பன பயன்படுத்தப்பட்டு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வுக்காக குறித்த கிராமத்தில் வாழும் பெற்றோரை இழந்த பல்வேறு பிரச்சினைக்குட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்ட 30 சிறார்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு அவை திரட்டப்பட்டன. அத்துடன் பாடசாலை அதிபர்கள் (இருவர்), ஆசிரியர், சமூகசேவைகள் உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் முதலியோரிடமிருந்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், இணையம் என்பவற்றிற்கூடாக தகவல்கள் பெறப்பட்டு இவ்வாய்வு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.




ISBN 978-955-627-120-1

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (RESULTS AND DISCUSSION)

கல்வியில் நாட்டமின்மை, கற்றலில் பின்னடைவு, அடிப்படை எண், எழுத்து தொடர்பான அறிவின்மை அல்லது அதில் உரிய தேர்ச்சிகளை அடையாமை, இடைவிலகல் போன்ற கல்விசார் பிரச்சினைகளே இப்பிள்ளைகளிடத்தில் பிரச்சினைகளாக இவ்வாய்வு மூலம் கண்றியப்பட்டுள்ளது.

பொதுவாக பெற்றோரை இழந்து நிற்கும் இச்சிறார்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வின் மூலம் இத்தகைய பிரச்சினைகளுக்கு பல்வேறு காரணிகள் அடையாளப்படுத்தப்பட்டன. இப்பிரச்சினைகளில் பிள்ளையின் தனித்துவம், குடும்பச் சூழல், சமூகச் சூழல், அரச நிர்வாக அமைப்பு மற்றும் பௌதீகச் சூழல் என்பன தொடர்புபடுகின்றன. இதில், பிரதானமாக அதாவது பெரும்பாலும் குடும்பச் சூழல் அதிக செல்வாக்குச் செலுத்துவதனை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. குறிப்பாக, பெற்றோரை இழந்து நிற்றல், அதிலும் குறிப்பாக தாயின் அரவணைப்பின்மை (தந்தையை இழந்த அதிகமான பிள்ளைகளின் தாய்மார் பெரும்பாலும் மத்திய கிழக்கில் தொழில் புரிதல் அல்லது மறுமணம் முடித்தல் காரணமாக), குடும்ப உறுப்பினரிடையே மதிப்பின்மை, அவர்களது அசமந்தப்போக்கு என்பன குறிப்பிடத்தக்கது. அத்துடன் குடும்பத்தின் வறுமை நிலையும் பாரிய பாதிப்பினை செலுத்துகின்றது.

***வரைபடம்: 03***




***மூலம்: கள ஆய்வு***

இந்தப் பின்னணியில் பின்வரும் பரப்புக்களில் காரணிகளை வகுக்கலாம்:

1. உளவியல் தொடர்பானவை

தந்தையை இழந்து தாயின் அல்லது இருவரையும் இழந்து குடும்பத்திலோ அல்லது நிறுவனங்களினாலோ பாராமரிக்கப்படுகின்ற அனாதைச் சிறார்கள் பாரிய உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். „பெற்றோரின் அரவணைப்பற்ற நிலை, பிரிவு, இழப்பு, வெருட்சி போன்றவை அவர்களது உளவியலை அதிகளவு பாதிக்கின்றன" (இஸ்மாயில் A.L.M. - 2017) „இளமைக்காலம் முதலே அவர்கள் எதிர்கொள்ளும் பெற்றோருடனான பிரிவு மனநிலை தாக்கத்துக்கு கொண்டு செல்கின்றது. இதனால் அவர்களது உளவிருத்தி பாதிப்புற்று ஆளுமைப்பிரச்சினை ஏற்படுகின்றது. அத்துடன், இப்பிள்ளைகளின் சமூகமயமாக்கல் தடைப்படவும் அதிகளவு வாய்ப்பிருக்கின்றது" (ரபாய்தீன் .U. - 2017)

இச்சிறார்கள் எதிர்கொள்ளும் மற்றொரு சவால் நடத்தைசார் பிரச்சினைகளாகும். „பெரும்பாலும் அனாதைச்சிறார்களிடம் அதீத தொழிற்பாட்டு நடத்தைக் கோலங்களைக் காண முடியும். கற்றல் செயற்பாடுகளின் போது இடைநடுவில் குழப்பமேற்படுத்தல், மற்றவறின் கவனத்தைப் பெற



ISBN 978-955-627-120-1

முயற்சித்தல், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், பட்டப்பெயர் சூட்டல், மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் தீங்கு செய்ய முயற்சித்தல் போன்ற நடத்தைப்பிரழ்வுகளைக் காண முடியும். இவர்கள் பெரும்பாலும் அதீத மனெவெழுச்சி கொண்டவர்களாக இருப்பர். அடிக்கடி மனெவெழுச்சிக்குட்படும் நிலையை வெளிப்படுத்துவர். அற்ப காரணங்களுக்கெல்லாம் கோபப்படல், அச்சம், பய உணர்வு, பதகளிப்பு போன்ற மனெவெழுச்சிப்பண்புகள் அதிகம் காணப்படும்ᵘ (ஹபீப் .A. - 2017)

ூஇச்சிறார்களிடையே அவதானிக்கத்தக்க மற்றொரு உளவியல்சார் பிரச்சினை தாழ்வு மனப்பாங்கும் அதனால் ஏற்படும் சமூகத்தை விட்டு ஒதுங்கும் நிலையாகும். அவர்களிடையே எற்படும் இத்தகைய நிலைக்கு உள விருத்தியே காரணமாகும். உள விருத்தியில் ஏற்படும் மந்த நிலையால் இத்தகைய செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்றனர்ᵘ (இஸ்மாயில் A.L.M. - 2017)

2. ஆரோக்கியம் சார்ந்தவை

ூநிறுவனங்களுக்கு வெளியில் உறவினர் வீடுகளில் வசிக்கும் அனாதைச் சிறார்கள் அதிகளவில் ஆரோக்கியம் சார்ந்த பிர்ச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்ᵘ (நஜிமுதீன் S.A.C. - 2017) மிகவும் சிறிய போதிய வசதிகளற்ற வீடுகளில் வசிக்கின்ற வறிய குடும்பங்களிலேயே இவர்கள் பெரும்பாலும் தங்கியுள்ளனர். இதனால் அவர்களது ஆரோக்கியம் அதிகளவில் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மற்றும் வீட்டுடன் இணைந்ததாக கழிப்பிடப்பிரச்சினை காணப்படுகின்றது. குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள அதிகளவான மக்கள் முறையான மலசல கூட வசதிகள் அற்றவர்கள். மேலும், சுத்தமான குடிநீர் இன்று பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்தள்ளது. பயன்பாட்டிலுள்ள கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என்ற பரிசோனைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெரும்பாலான கிணற்று நீர் குடிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. எனவே, குடிப்பதற்கு உகந்த தூய நீரைப்பெற்றுக் கொள்ள வேண்டிய பாரிய சவாலுக்கு சமூகம் முகம் கொடுத்துள்ளது. இது இத்தகைய வறுமைக் குடும்பங்களில் தங்கிவாழும் இச் சிறார்களையும் பாதிக்கும் பாரிய பிரச்சினையாகும். இது தவிர ூவறுமை காரணமாக அல்லது புறக்கணிப்பு காரணமாக ஆரோக்கியமான உணவைப் பெறுவதிலும் இச் சிறார்கள் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர்ᵘ (நஜிமுதீன் S.A.C. - 2017) அத்துடன் தாயின் பராமரிப்பு இல்லாத பிள்ளைகள் பல்வேறு ஆரோக்கியம் சார்ந்த சிக்கலுக்கு ஆளாகின்றமையும் அறியப்பட்டுள்ளது.

இத்தகைய பிரச்சினைகள் இச்சிறார்களின் ஆரோக்கியத்தை பாதிக்கின்றது. இவர்கள் பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். தொடர்ச்சியான நோய்த்தாக்கங்கள் சில வேளைகளில் அவர்களை நிறந்தர ஊனத்திற்கும் கொண்டு செல்ல வாய்ப்புள்ளது. அத்துடன், பிறப்பால் ஊனமான பிள்ளைகளும் இச்சிறார்கள் மத்தியில் சமூகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். வேறுசில பிள்ளைகள் பாரம்பரிய நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றினாலும் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

3. பண்பாட்டு, ஒழுக்கம்சாரந்தவை

இச்சிறார்களைப் பொருத்தவரையில் சிலவேளைகளில் பெற்றோர் உயிரோடிந்தாலும் கூட ஏதோ ஒரு வகையில் அவர்களைப்பிறிந்தே வாழ்கின்றனர். அத்துடன் ூசமூகச் சூழல், வளர்ந்தோரால் நிராகரிக்கப்படல், சிறந்த முன்மாதிரியின்மை, பெற்றோரின் துர்நடத்தை போன்ற காரணிகளால் அப்பிள்ளைகள் பிழையான நபர்களிடம் சிக்க வேண்டிய ஓர் துர்பாக்கிய நிலை ஏற்படுகின்றதுᵘ (ஜெளபர் A.L.M. - 2017) இத்தகைய பிழையானவர்களின் தொடர்புகள் அப்பிள்ளைகளை பண்பாட்டு மற்றும் ஒழுக்க ரீதியில் பாதிப்படையச் செய்து மறை சமூகமயமாக்கலை அவர்கள் மத்தியில் ஏற்படுத்திவிடுகின்றது. இதனால் காலப்போக்கில் அச்சிறார்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட ஆரம்பிப்பர். இது இன்றெழுந்துள்ள மிகச் சிக்கலானதொரு சவாலாகும். அத்துடன் இத்தகைய சிறார்களிடையே காணப்படும் பண்பாட்டுக்கு முரணான செயற்பாடுகள் ஆளுக்காள் வேறுபடும் தன்மை கொண்டதாக இருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

இதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு.ூஇத்தகைய சிறார்கள் பெரும்பாலும் விழுமியக் கல்வியிலிருந்து தூரமாகியே காணப்படுவர்ᵘ (ஹபீப் .A. - 2017) விழுமியக்கல்விச் சூழல்


ISBN 978-955-627-120-1

இல்லாத ஒரு சமூக அமைப்பிலேயே அவர்கள் தொடர்சியாக வாழ்கின்றனர். இது மென்மேலும் அவர்கள் பண்பாட்டு வீழ்ச்சியை நோக்கிச் செல்ல வழிவகுக்கின்றது.

சகபாடிகள், ஒத்தகுழுக்கள் என்பது இச்சிறார்கள் எதிர்கொள்ளும் மற்றொரு சவாலாகும். ..ஒரே பருவத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்நாள் முழுவதும் நெருக்கமானதும் சிநேக" ர்வமானதுமான உறவுகளைப் பேணி வருகின்றனர்" (கல்வியின் சமூக அடிப்படைகள் தொகுதி II - 2001) ஒத்த குழுவினூடாகவே சிறுவர்கள் பெரும்பாலும் அதிகளவில் கற்கின்றனர். இக்குழுக்களுக்கூடாகவே பெரும் முன்மாதிரிகள் அதிகளவில் தாக்கம் செலுத்துகின்றன. செய்ய வேண்டியது செய்யக்கூடாதது என்பது பற்றிய தெளிவில்லாத ஒரு வாழ்வு முறையையே பெரும்பாலும் அவர்களால் கற்க முடியும்.

இக்கிராமத்தில் வாழும் பெற்றோரை இழந்த இச்சிறார்கள் எதிர்கொள்ளும் மற்மொரு பிரச்சினை துஸ்பிரயோகம். சில சமயங்களில் குடும்ப உறுப்பினர்களாலயே அவர்கள் துஸ்பிரயோகம் செய்ய வாய்ப்புண்டு எனக் கண்டறியப்பட்டுள்ளது. பராமரிப்பற்ற பெற்றோரை இழந்துள்ள இச்சிறார்கள் அதிகளவில் பாலியல் து'பிரயோகம் மற்றும் போதைவஸ்துப் பாவனை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும். பொதுவாக இச்செயல்களில் பலாத்காரமாகவோ அல்லது சில பொருளாதார தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவோ அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால் காலப்போக்கில் இச்செயல்களுக்கு அடிமைப்பட்டு சீரழிய அதிக வாய்ப்புக்கள் உள்ளன. பல்வேறு மட்டங்களில் இவர்களுக்கெதிரான பாலியல் தொந்தரவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இன்று பாரிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

..இன்றைய உலகம் எதிர்கொள்ளும் பாரிய சவால்களில் ஒன்றாக சிறுவர் துஸ்பிரயோகம் காணப்படுகின்றது. இலங்கையிலும் சிறுவர் துஸ்பிரயோகம் அண்மைக்காலமாக படுமோசமான நிலையினை அடைந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது" (அஹமது சஜ்ஜாத் E.T. - 2014)

4. சமூகம்சார்பானவை

..பெற்றோரை இழந்த இச்சிறார்கள் சமூக ரீதியாக மிகக் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். சமூக ரீதியாக அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஏனைய சதாரண பிள்ளைகளை விட மிகக் கடுமையானதாகும்" (காசிம் P.M.M - 2017) குறிப்பாகக் கூறுவதாயின் சமூகப்புறக்கணிப்பைக் குறிப்பிடலாம். சமூகத்தளத்தில் ஏற்படும் இத்தகைய புறக்கணிப்பானது அவர்களை எல்லாத் துறைகளிலும் பாதிப்படையச் செய்யும் மூலக்காரணியாகும். இதுவே ஏனைய துறைகளிலும் தாக்கம் விளைவிக்கக் கூடியது.

இது தவிர, தற்கால சமூக அமைப்பு இத்தகைய சிறார்களைப் பொருத்தவரைக்கும் மிகப்பாரிய சவால்மிக்கது. குறிப்பாகக் கூறுவதாயின் வெகுஜன ஊடகம், விரைவான தொழில்நுட்ப வளர்ச்சி குறிப்பிடத்தக்கவை. ..நாள்தோரும் மூன்று மணி நேரம் தொலைக்காட்சியினைப் பார்த்த குழந்தைகள் பள்ளி இறுதி வகுப்பினைக் கூட முடிக்கவில்லை. பத்து வயதுக்கு முன்பே அதிகம் தொலைக்காட்சியைப் பார்த்த குழந்தைகள் புத்திசாலிகளாக இருந்தாலும் பாதிக்கப்படுகின்றனர்" (பாஸ்டின் C - 2012)

யுத்தம் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மீண்டுவர முடியாமை, உல்லாசப்பயணத்துறை போன்றவையும் இதில் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவை பல்வேறு வழிகளிலும் பாதிக்கின்றது. இதில் குறிப்பாக ஒழுக்க மற்றும் பண்பாட்டுத்துறை பாரியளவில் பாதிப்படைகின்றன.

மேலும், இன்றை சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ள மனப்பாங்கு மிக முக்கியமாக கவனிக்கத்தக்கது. பொதுவாக சிறுவர் உரிமைகள் தொடர்பாக சமூகம் அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கிற்கு இன்னும் வரவில்லை. இந்த நிலையில் பெற்றோரை இழந்த சிறார்களை ஆதரித்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றும் மனப்பாங்கு இன்னும் சமூகத்தில் வளரவில்லை என்று ஒரு கருத்துநிலை காணப்படுகின்றது. சமூக மனமாற்றத்தை ஏற்படுத்தாத வகையில் இந்நிலை தொடந்துகொண்டே இருக்கும்.

5. பொருளாதாரப் பிரச்சினைகள்



ISBN 978-955-627-120-1

„ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தியாவட்டவான் கிராமமானது பொருளாதார ரீதியாக பின்னதள்ளப்பட்டுள்ளது" (ஜெளபர் A.L.M. - 2017) எமது ஆய்வுக்குட்பட்ட வகையில் 90 வீதத்திற்கும் அதிகமான இத்தகைய சிறார்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். இச்சிறார்கள் தங்கிவாழும் குடும்பங்களும் அதே அளவு வறுமையிலும் பொருளாதாரத் தேவைகளுடனும் வாழ்கின்றனர். இத்தகைய பொருளாதாரத்தின் பால் உள்ள தோவையானது பல சந்தர்ப்பங்களில் இச்சிறார்கள் இடர்படக் காரணமாக அமைகின்றது. கல்வி மற்றும் சுகாதாரம் பொருளாதாரமயப்படுத்தப்பட்டுள்ள இந்தக் காலகட்டத்தில் இச்சிறார்கள் அவற்றைப் பெறுவதில் வெகுதொலைவிலேயே உள்ளனர்.

அத்துடன் தமது பொருளாதார வளங்களைப் பெறுவதில் பல்வேறுபட்ட சட்டரீதியான மற்றும் சமூக ரீதியான தடைகளை எதிர்கொள்கின்றனர். சுய தொழில் ஒன்றிலோ அல்லது சம்பளத்துக்கு வேலை ஒன்றைத் தேடுவதிலோ அவர்கள் தடைப்படுவது இதில் அடங்கும். இத்தடைகள் அவர்கள் தாமாக தமது பொருளாதாரத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக் கூட முடியாத நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. இதனால் "பொருளாதார ரீதியாக இப்பிள்ளைகள் பெருமளவில் சவால்களை சந்திக்கின்றனர். சமூகத்தில் தனியான பொருளாதார நிதியங்கள் இவர்கள் தொடர்பில் இல்லாமை பெரும் குறையாகும்" (இஸ்மாயில் A.L.M. - 2017)

இத்தகைய பொருளாதாரம் மற்றும் வளங்கள் தொடர்பான பிரச்சினை பொதுவான முஸ்லிம் சமூகத்தின் கல்விசார் பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. „முஸ்லிம்களின் கல்வி பின்னடைவிற்குப் பல காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளன. நலிவான பொருளாதார நிலை பாடசாலைகளில் கல்வி வளங்கள் போதுமானதான அளவில் இல்லாமை, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இன்மை, தகுதிவாய்ந்த முகாமையாளர்கள் -குறிப்பாக அதிபர்கள்- இன்மை போன்றவை அவற்றுள் பிரதானமானவையாகும்" (யாக்கூத் M.H.M. - 2010)

இப்பொருளாதார தேவைகள் காரணமாகவே இப்பிள்ளைகளின் தாய்மார் இவர்களைப் பெரிதும் பிரிந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அல்லது உள்நாட்டில் ஏதாவது ஒரு தொழிலில் அல்லது மறுமணம் மூலம் தனது புதிய கணவனின் பொருளாதார அனுசரணையில் தங்கியிருத்தல் என்ற ஒரு நிலை ஏற்பட்டு தமது சிறார்களை பராமரிக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது. எனவே இச்சிறார்களின் பொருளாதார பிரச்சினை தீர்க்கப்பட்டாலும் ஏனைய பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும் என்பது இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட மிக முக்கிய விடயமாகும்.

## முடிவுரை (CONCLUSION)

ஒரு சமூகத்தின் எதிர்கால சந்ததி என்ற வகையில் பெற்றேரை இழந்த இச்சிறார்கள் பல்வேறு காரணிகளால் கல்விசார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். எனவே, இது குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது என்பது இவ்வாய்வின் முடிவாகும். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பின்வரும் தீர்வுகளை இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

- சிறந்த குடும்பமயமாக்கல்: இதன் மூலம் அதிகளவிலான பிரச்சினைகள் தீர்க்கப்படலாம். நிறுவனமயப்படுத்தப்பட்ட தீர்வை விட இதுவே பொருத்தமானது. சிறுவர்களும் இதையே விரும்புகின்றனர். எனினும் இத்தீர்வு சாத்தியப்படுமாயின் இதுவே மிகப்பொருத்தமானதாகும். பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்தின் அடிப்படையில் பார்த்தாலும் இதுவே மிகப் பொருத்தமானதொன்றாகும். இங்கு ஒரு சில பிரச்சினைகள் ஏற்படினும் (பொருளாதாரம் போன்றவை) ஏனைய பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வாக அமையும்.
- நவீன காலத்திற்குப் பொருத்தமான அதன் சவால்களை முகங்கொடுக்கக் கூடிய வகையில் இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த வினைத்திறன்மிக்க நிர்வாக முகாமைத்துவத்தைக் கொண்ட சிறுவர் இல்லங்களை அமைத்தல்
- சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தலும் பிள்ளைமைய கல்வி முறையை ஊக்குவித்தல்
- இலவச உளவள ஆலோசனை நிலையங்களை நிறுவுதலும் ஆலோசனைகளை வழங்கலும் சிறுவர் உரிமை தொடர்பான சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக விழிப்" ட்டலும்



ISBN 978-955-627-120-1

- பிள்ளைகள் தங்கிவாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தலும் பாடசாலை வளங்களை அதிகரித்தலும்
- விழுமியக்கல்வி ஊட்டுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளல்
- சிறுவர் நிதியங்களை உருவாக்கலும் தொழில் கல்வி வழிகாட்டல் வழங்கலும்

**உசாத்துணைப் பட்டியல்**

சோபா .B. (2015) வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் மேம்பாட்டில் ஒழுக்கம்சார் விழுமியங்களின் பங்களிப்பு - இடைநிலைப் பிரிவு மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, 2nd International Symposium - 2015, FIA, SEUSL.

ஹஸன் M.H.M. (2007) அன்றாட வாழ்வில் அனைவருக்கும் உளவியல், இஸ்லாமிக் புக் ஹவுஸ், கொழும்பு.

கலாநிதி. கமலநாதன் .வு. (2005) இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒப்பீட்டு ஆய்வு - நோர்வோ, எத்தியோப்பியா, இலங்கை (நினைவுப் பேருரை) தேசிய கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

கல்வியின் சமூக அடிப்படைகள் தொகுதி II - 2001, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.

கல்வி உளவியல் தொகுதி II - 1989, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.

கருணாநிதி .M. (2007) அகவிழி சஞ்சிகை மார்ச் 2007, அகவிழி, கொழும்பு.

அஹமது சஜ்ஜாத் E.T. (2014) நங்கூரம், பிரதேச செயலகம், கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை.

நேர்காணல்கள் **(INTERVIEWS)**

காசிம் P.M.M - (04.08.2017) - சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்
ஜெளபர் A.L.M. - (04.08.2017) - கிராம சேவைகள் உத்தியோகத்தர்
இஸ்மாயில் A.L.M. - (25.07.2017) - அதிபர்
ரபாய்தீன் .U. - (25.07.2017) - ஆசிரியர்
ஹபீப் .A. - (04.08.2017) - அதிபர்
நஜிமுதீன் S.A.C. - (04.08.2017) - சமூகசேவைகள் உத்தியோகத்தர்

இணையத்தளம்

பாஸ்டின் C - (2012) ஊடகமும் மனித மாண்பும் http://mediaandhumandignitytamil.blogspot.com/2012/09/blogpost.html?m=1#comment-form

யாக்கூத் M.H.M. (2010) இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலை http://www.ibnuabbas.org/tamil/kattu/janab%20%20yaqooth.pdf

நிசாந்தினி .U. (2013) மாணவர்களின் கல்வி தடைப்படுவதற்கான காரணங்கள், http://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/24108-2013-06-08-07-31-15

அருணா .D. (2011) இலங்கையில் சிறுவர் உரிமையும், சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும், https://pothikai.wordpress.com



ISBN 978-955-627-120-1